**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 10/2018**
**நாள் 07/06/2024, வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - சாமு | த/பெயர் - வேணு |
| வயது - 47 | தொழில் - |
| விலாசம் - நேமலூர் காலணி, ரோஜா நகரம் அஞ்சல், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (PW3)**

நான் இந்த வழக்கில் முதல் வாதி மற்றும் 7ம் வாதி சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் சரிதான். நான் இவ்வழக்கின் 19 வது வாதி என்றால் சரிதான். முதல் மற்றும் 7ம் வாதி சாட்சியம் அளித்ததில் எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா எ ன்றால் இல்லை. அவர்கள் கூறாத விவரங்களை நான் எனது பிரமான வாக்குமூலத்தில் புதிதாக விவரங்கள் ஏதேனும் சொல்லிருக்கிறேனா என்றால் இல்லை. 8ம் வாதி எந்த ஊரில் உள்ளார் என்றால் நேமலூர் பெரிய காலனியில் உள்ளார். முதல் வாதிக்கும் எனக்கும் ஏற்கெனவே பொன்னேரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழி பிரச்சனை சம்மந்தமாக வழக்கு நடந்து வந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு ஒரு வழக்கு நடந்து அது 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக முடிந்து பின்னர் பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து அந்த மேல்முறையீடு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு தள்ளுபடி ஆன பிறகு முதல் பிரதிவாதிக்கு கிடைத்த உரிமையை மறுப்பதற்காக

நாங்கள் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு ஏற்க்கெனவே சார்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மேல்முறையீட்டு தீர்ப்பு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல் முறையீடு வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்உரையில் உள்ள சாராம்சங்களை படித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கை நடத்தவிடாமலும் வழக்கை காலதாமதம் செய்வதற்காக வாதிகளை ஒருவர் மாற்றி ஒருவர் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் உண்மையானவை அல்ல என்றும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதிகளுக்கு எதிராக கோரியுள்ள எதிர் பரிகாரம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**